Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:- 88/2018 Date:- 09.10.2025

Deposition of witness for prosecution :- PW :-3

| | | | |
|---|---|---|---|
| Name | கணேசன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது அந்தியூருக்குப் பக்கத்திலுள்ள பூணாச்சி நத்தம்பட்டியில் வசித்துக்கொண்டு அரசு பேருந்து ஓட்டுநரான பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 திருலோகசந்தரை எனக்குத் தெரியும். சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு நான் 2-ம் நெம்பர் எண் பேருந்தில் டிரைவராக வேலை பார்த்தேன். மாலை 05.00 மணிக்கு 2 நபர்கள் பேருந்தை சுற்றி சுற்றி வந்து தகராறு செய்தார்கள்.

2. அ.சா.1 திருலோகசந்தர் அவர்களைத் தட்டிக் கேட்டார். அதன் காரணமாக அவர்களுக்குள் வாக்குவாதமாகி சண்டை ஏற்பட்டது. மேற்படி 2 நபர்களும் திருலோகசந்திரன் சட்டையை பிடித்து இழுத்து தகராறு செய்தார்கள். மேலும் திருலோகசந்தரை கொலை மிரட்டல் செய்தார்கள். மேற்படி 2 நபர்களும் இவ்வழக்கில் ஆஜராகியுள்ள எதிரிகளா என்றால் எனக்கு நினைவில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. காவல்துறையினர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். காவல்துறை விசாரணை செய்தபோது நான் அன்றைய தினம் பணியிலிருந்ததற்கான ஆவணங்களைக் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடக்கும்போது நான் டிரைவர் சீட்டில் இருந்தேன்.

2. பின்னால் சத்தம் கேட்டபின்புதான் நான் போய்ப் பார்த்தேன். அப்போது அங்கு கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். யார் யாரை அடித்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.